

உதகை 200 மற்றும் கோடை விழாவின் முக்கிய நிகழ்ச்சியான 125வது மலர்க்காட்சியை உதகை அரசு தாவரவியல் பூங்காவில், சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் நீலகிரி மக்களவை தொகுதி உறுப்பினர் ஆ.ராசா துவக்கிவைத்து அங்கு மலர்களினால் அமைக்கப்பட்டிருந்த உருவ அமைப்புகளை பார்வையிட்டார். இந்த நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் ச.ப.அம்ரித், உதகை சட்டமன்ற உறுப்பினர் த.ஆர்.கணேஷ், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் முனைவர் கி.பிரபாகர், அனைத்து அரசு துறை சார்ந்த அலுவலர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

## சென்னை மாநகராட்சி எச்சரிக்கை!

சென்னை, மே 21-

சென்னையில் தனியார் கழிவுநீர் லாரி இயக்குவோர் மனிதர்களை கழிவுநீர் தொட்டிக்குள் இறங்க அனுமதிக்க கூடாது என சென்னை மாநகராட்சி தெரிவித்துள்ளது. யாரையும் அபாயகரமான முறையில் கழிவுநீர் தொட்டியை சுத்தம் செய்ய ஈடுபடுத்தக் கூடாது எனவும் கழிவுநீர் தொட்டிக்குள் இறங்கி பணியாளர் இறக்க நேரிட்டால் ரூ.15 லட்சம் இழப்பீடு தர வேண்டும் எனவும் சென்னை மாநகராட்சி தெரிவித்துள்ளது.

திறந்தவெளி, நீர்நிலைகளில் கழிவுநீர் மற்றும் பிற கழிவுகளை வெளியேற்றக் கூடாது என சென்னை மாநகராட்சி தெரிவித்துள்ளது.

### கர்நாடகப்

# படுதோல்வியை மறைக்க ஒற்றைத் தந்திரம்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சென்னை, மே 21-

“கர்நாடகப் படுதோல்வியை மறைக்க ஒற்றைத் தந்திரம்” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

இதுகுறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப்பதிவு வருமாறு:-

**500 சந்தேகங்கள்**
**1000 மர்மங்கள்**
**2000 பிழைகள்!**
**கர்நாடகப் படுதோல்வியை**
**மறைக்க**
**ஒற்றைத் தந்திரம்!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

### தி.மு.க. நெசவாளர் அணி

# மாநில நிர்வாகிகள் கலந்துரையாடல் கூட்டம்

### நெசவாளர் அணித் தலைவர் நன்னியூர் இராஜேந்திரன் அறிக்கை

தி.மு.க. நெசவாளர் அணி மாநில நிர்வாகிகள் கலந்துரையாடல் கூட்டம் 24-5-2023 புதன்கிழமை காலை 11.00 மணி அளவில் சேலம்,“கலைஞர் மாளிகை”யில், எனது தலைமையில், நெசவாளர் அணி துணைத் தலைவர் பள்ளிப்பட்டு ஓ.எ.நாகலிங்கம் வரவேற்புரையாற்றிட, செயலாளர்கள் எஸ்.எல். டி.ப.சச்சிதானந்தம், அருப்புக்கோட்டை க.பழனிசாமி, காஞ்சிபுரம் தி.அன்பழகன், பரணி கே.மணி, நெல்லை எஸ்.பெருமாள், பொள்ளாச்சி கே.எம்.நாகராஜன், ஈரோடு சிந்து ரவிச்சந்திரன் துணைச் செயலாளர்கள் வசந்தம் ஜெயக்குமார், கோபி மணிமாறன், திருச்சி கோவிந்தசாமி, தேனி ராமசாமி ஆகியோர் முன்னிலையில் நடைபெற உள்ளது.

இதில் சேலம் மத்திய மாவட்டச் செயலாளர் ஆர்.இராஜேந்திரன், எம்.எல்.ஏ., அவர்கள் சிறப்புரையாற்றுகிறார்.

இக்கூட்டத்தில் மாநில நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள் : 1. தமிழினத் தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழா;
2. ஆக்கப் பணிகள் குறித்து.

“அண்ணா அறிவாலயம்”
சென்னை-18.
நாள்: 20-05-2023

**நன்னியூர் இராஜேந்திரன்**
தலைவர்,
தி.மு.க. நெசவாளர் அணி

### அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் தலைமை! ஒன்றியச் செயலாளர்கள்

# லெ.மு.ரவிச்சந்திரன் - ஆர்.ஜி.சுப்பிரமணியன் இல்லத் திருமணங்கள்! அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நடத்தி வைக்கிறார்!

### எஸ்.ரகுபதி, மா.சுப்பிரமணியன், செந்தில்பாலாஜி, அன்பில் மகேஷ்பொய்யா மொழி, சிவ.வீ.மெய்யநாதன், குன்றக்குடி அடிகளார் பங்கேற்பு!

சிவகங்கை. மே 21-

கழக இளைஞரணி செயலாளரும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் வருகிற 25ம்தேதி வியாழக்கிழமை சிவகங்கை மாவட்டத்தில் சுற்றுப்பயணம் மேற்கொள்கிறார். அன்றைய தினம் இரண்டு ஒன்றிய செயலாளர்களின் மகள்கள் திருமணத்தை நடத்தி வைக்கிறார்.

அவரது நிகழ்ச்சிகள் வருமாறு.

காரைக்குடி. சிவகங்கை மாவட்டம் கண்ணன்குடி ஒன்றிய கழக செயலாளர் லெ.மு.ரவிச்சந்திரன் - திருமதி ர.சௌந்தரி ஆகியோர் மகள் பொறியாளர் ர..சிவசக்தி முன்னாள் பொதுக்குழு உறுப்பினர் திருப்பத்தூர் காரையூர் இரா.செழியன் - திருமதி மல்லிகா மகன் பொறியாளர் செ. தமிழ்வாணன் ஆகியோரது திருமணம் 25.5.2023 வியாழக் கிழமை காலை 9மணியிலிருந்து 10 மணிக்குள் காரைக்குடி கிரிஷ் மகாலில் சிவகங்கை மாவட்டகழக செயலாளரும், கூட்டுறவுத் துறை அமைச்சருமான கேஆர்.பெரியகருப்பன் தலைமையில் நடைபெறுகிறது.

கழக இளைஞரணி செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் திருமணத்தை நடத்தி வைத்து சிறப்புரையாற்றுகிறார்.

நிகழ்ச்சிக்கு அமைச்சர்கள் எஸ்.ரகுபதி, மா.சுப்பிரமணியன், வி.செந்தில்பாலாஜி, அன்பில் மகேஷ் பொய்யாமொழி, முன்னாள் எம்.எல்.ஏ. கேஆர். ராமசாமி ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள். முன்னாள் ஒன்றிய நிதி அமைச்சர் ப.சிதம்பரம் எம்.பி. மற்றும் கழக நிர்வாகிகள் அனைத்து கட்சிப் பிரமுகர்கள் மணமக்களை வாழ்த்திப் பேசுகிறார்கள். முன்னதாக முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் வரவேற்புரை ஆற்றுகிறார்.

மணவிழா ஏற்பாடுகளை கண்ணன்குடி ஒன்றிய கழக செயலாளர் லெ.மு.ரவிச்சந்திரன் திருமதி ர.சௌந்தரி ர.முத்துராமலிங்கம் திருமதி மல்லிகா செழியன் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் செ.தமிழ்நம்பி திருமதி வைஷாலி ஆகியோர் செய்து வருகிறார்கள்.

குன்றக்குடி. கல்லல் மேற்கு ஒன்றிய கழக செயலாளர் குன்னக்குடி ஆர். ஜி.சுப்பிரமணியன் எஸ். லதா ஆகியோரின் மகள் சு.கிருஷ்ணவேணி மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி தாலுகா பெருமங்கலம்கிராமத்தைச் சேர்ந்தவரும், தலைமைச் செயற்குழு உறுப்பினருமான இராம. இளங்கோவன் திருமதி. ராதிகா ஆகியோரின் மகன் இள.பவித்ரன் ஆகியோரது திருமணம் 25.5.2023 வியாழக்கிழமை காலை 10.30 மணிக்கு மேல் 12 மணிக்குள் குன்றக்குடி காரைக்குடி மெயின் ரோட்டில் உள்ள செல்வகுமார் பாம்ஸ் மகாலில் நடைபெறுகிறது. திருமணத்தினை கழக இளைஞரணி செயலாளரும் இளைஞர்நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சரு மான உதயநிதி ஸ்டாலின் தலைமைஏற்று திருமணத்தை நடத்தி வைத்து சிறப்புரையாற்றுகிறார்.

சிவகங்கை மாவட்ட செயலாளரும், கூட்டுற வுத் துறை அமைச்சருமான கேஆர்.பெரியகருப்பன் தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள். மணமக்களை அமைச்சர்கள் எஸ்.ரகுபதி மா.சுப்பிரமணியன், வி.செந்தில் பாலாஜி, அன்பில்மகேஷ் பொய்யா மொழி சிவ.வீ. மெய்யநாதன், மயிலாடுதுறை மாவட்ட கழக செயலாளர் நிவேதா எம்.முருகன் மற்றும் கழக நிர்வாகிகள் அனைத்து கட்சி பிரமுகர்கள் மணமக்களை வாழ்த்திப் பேசுகிறார்கள். முன்னதாக கல்லல் மேற்கு ஒன்றிய செயலாளர் குன்னக்குடி சுப்பிரமணியன் வரவேற்றுப் பேசுகிறார். தலைமைச் செயற்குழு உறுப்பினர் இராம. இளங்கோவன் நன்றியுரை ஆற்றுகிறார். மணவிழா ஏற்பாடுகளை ஆர். ஜி.கண்ணன், சோலை, குன்னக்குடி சுப்பிரமணியன் திருமதி லதா, ஆர்.ஜி. சரவணன், திருமதி புனிதா, சு. மணிகண்டன், இராம. இளங்கோவன், திருமதி. ராதிகா, இராம.வைத்தியநாதன், திருமதி கவிதா, இராம. முத்துக்குமரன் சாந்தி, சீ.சதிஸ்குமார் நந்தினி, வை.மணிகண்டகுரு ஆகியோர் செய்து வருகிறார்கள்.



முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி சென்னை, அண்ணா சாலை, தேவ நேயப் பாவாணர் மாவட்ட மைய நூலகத்தில் ஆய்வு மேற்கொண்டு நூலகத்தின் மேம்பாட்டிற்குத் தேவையான செயல்திட்டங்கள் குறித்து கருத்துகளைக் கேட்டறிந்தார்.

# முன்னாள் அமைச்சர் பசும்பொன் தா.கிருட்டிணன் 20வது ஆண்டு நினைவு நாள்!

### அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தலைமையில் கழகத்தினர் அஞ்சலி!

சிவகங்கை, மே 21-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை தாலுகா கொம்புக்காரனேந்தலில் பிறந்தவர் பசும்பொன் தா.கிருட்டிணன். இவர் மாணவர் பருவத்திலேயே கழகத்தில் சேர்ந்து மாணவர் அமைப்பில் பணியாற்றினார். தொடர்ந்து கட்சியில் கிளைக் கழக ஒன்றிய கழக செயலாளராகவும் , மானாமதுரை ஒன்றிய பெருந்தலைவராகவும், ஒன்றுபட்ட ராமநாதபுரம் மாவட்ட கழக செயலாளராகவும், அமைப்பு செயலாளராகவும் நாடாளுமன்ற ராஜ்ய சபை உறுப்பினராகவும், சிவகங்கை சட்டமன்ற உறுப்பினராகவும் பணியாற்றினார். முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் தலைமையிலான அமைச்சரவையில் நெடுஞ்சாலை துறை அமைச்சராக பணியாற்றினார்.

தென் மாவட்டங்களில் கழகத்தின் வளர்ச்சிக்கு அயராது பாடுபட்ட கழகத்தின் மூத்த முன்னோடியாக விளங்கிய தா.கிருட்டிணன் 2003 மே 20 ஆம் தேதி மரணமடைந்தார். அவரது நினைவினைப் போற்றிடும் வகையில் ஆண்டுதோறும் மாவட்ட தி.மு.க. சார்பில் நினைவஞ்சலி செலுத்தப்படுகிறது. நேற்று பசும்பொன்தா.கிருட்டிணனின் 20வது ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு கொம்புகாரனேந்தலில்உள்ள அவரது நினைவிடத்தில் மாவட்டக் கழக செயலாளரும், கூட்டுறவுத்துறை அமைச்சருமான கே.ஆர். பெரியகருப்பன் தலைமையில் தி.மு.க.வினர் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார். தொடர்ந்து திருமதிதமிழரசிரவிக்குமார் எம்.எல்.ஏ. பசும்பொன் தா.கிருட்டிணன் தம்பி தா. ராமையா, தா.கி. அவர்களின் புதல்வர் தொல்காப்பியன், முன்னாள் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் தா.இரா. நெடுஞ்செழியன், முன்னாள் எம்.எல். ஏக்கள் சுப.மதியரசன், மாரியப்பன் கென்னடி, மாவட்ட கழக துணை செய லாளர்கள் த.சேங்கை மாறன்,கே.எஸ்.எம். மணிமுத்து,செயற்குழு உறுப்பினர் அ.முகம்மது, பொதுக்குழு உறுப்பினர்கள் த.உதயகுமார், ஏ.ஆர்.ஜெயமூர்த்தி, மானாமதுரை நகர கழக செயலாளர் க.பொன்னுச்சாமி, ஒன்றிய கழக செயலாளர்கள். துரை ராஜாமணி, எம். அண்ணாதுரை, ஏ.கடம்பசாமி, எம். ஜெயராமன், ஆர்.எம்.கென்னடி, கா.வெங்கட்ராமன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நாகனிசெந்தில்குமார், துணை அமைப்பாளர் கே.எம்.பொற்கோ, மாவட்ட மகளிரணி அமைப்பாளர் பவானி கணேசன், துணை அமைப்பாளர் மார்க்ரெட் கமலா திலகவதி கண்ணன்,

ஒன்றிய நகர நிர்வாகிகள் கரு.இலக்கியதாசன், உதய சூரியன், புவியரசு, மூர்த்தி ,பாஸ்கரன், சண்முகம் அண்ணாமலை, ஆர். டி. சேகர், ஊராட்சி மன்ற தலைவர் சண்முகநாதன் நாசர், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கதி. ராஜ்குமார்மாவட்ட விளையாட்டு அணி அமைப்பாளர் கே.எஸ்.நாராயணன் பேருராட்சி மன்றத்தலைவர் திருமதி கோகிலராணி நாராயணன், தமிழாசிரியர் இளங்கோ, மானாமதுரை ஒன்றியக்குழு தலைவர் திருமதி லதாஅண்ணாதுரை, துணைத்தலைவர் முத்துச்சாமி மாணவரணி கார்த்தி, ஒன்றிய துணைச் செயலாளர் முத்துக்குமார், மற்றும் ஏராளமான தி.மு.க.வினர் அஞ்சலி செலுத்தினார்கள்.

நினைவு நாள் நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை சிவகங்கை மாவட்ட தி.மு.க.வினர்,மற்றும் பசும்பொன் தா.ராமையா அவரது குடும்பத்தினர் செய்திருந்தார்கள்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சைதை இரா. லோகநாதன்
### மே 21 (2015)



இளமை பருவத்திலேயே கழகத்தில் ஈடுபாடு கொண்டு சென்னை, சைதை பகுதிக் கழகத்தில் வட்டச் செயலாளராகவும் – பகுதி துணைச் செயலாளராகவும் பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.

சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினராக கழகத்தின் சார்பில் வெற்றி பெற்று, அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

சைதை கூட்டுறவு வங்கி இயக்குநராக பொறுப்பு வகித்தவர்.

இந்தி எதிர்ப்பு போராட்டம், விலைவாசி உயர்வு எதிர்ப்பு போராட்டம், சட்ட நகல் எரிப்பு போராட்டம் என கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

### தமிழகத்தில்

## வெயிலின் தாக்கம் அதிகரிப்பு!

சென்னை, மே 21 -

தமிழகத்தில் இந்த ஆண்டு கோடைவெயில் வாட்டி எடுத்து வருகிறது. குறிப்பாக சென்னையில் வெயிலின் தாக்கம் பல மடங்கு அதிகரித்து காணப்படுகிறது. இதனால் பகல் நேரங்களில் வெளியில் தலை காட்ட முடியாத அளவுக்கு வெப்பம் அதிகமாகவே உள்ளது. இனிவரும் நாட்களிலும் வெயிலின் தாக்கம் மேலும் அதிகரிக்கும் என்றே வானிலை மையம் கணித்துள்ளது. இந்த நிலையில் வருகிற 26ந்தேதி முதல் அடுத்த மாதம் (ஜூன்) 4ந்தேதி வரை வெயிலின் தாக்கம் அதிகரிக்க வாய்ப்பு உள்ளதாக தனியார் வானிலை நிபுணர் பிரதீப்ஜான் தெரிவித்துள்ளார். கடந்த சில நாட்களுக்கு முன்பு வங்கதேசத்தை தாக்கிய புயலின்போது 240 கி.மீ வேகத்தில் கடுமையான காற்று வீசியது. இது தமிழகத்துக்கு வர வேண்டிய மேகங்களை இழுத்துச்சென்றுள்ளது. இதன் காரணமாகவே இயல்பை விட அதிக வெயில் காணப்படுகிறது. இதனால் தான் 100 டிகிரியை தாண்டி வெப்பம் பதிவாகி வருகிறது. கடலோர பகுதிகளில் வீசும் கடல் காற்றால் சென்னை போன்ற கடலோர மாவட்டங்களில் வெப்பம் குறைய வாய்ப்பு உள்ளது.

### ச.பிரபு தலைமை! திருநீர்மலை த.ஜெயகுமார் வரவேற்புரை!

# பம்மல் வடக்கு பகுதியில் அரசின் சாதனை விளக்கப் பொதுக்கூட்டம்!

### டி.ஆர்.பாலு எம்.பி. - அமைச்சர் தா.மோ.அன்பரசன் - வண்ணை புகாரி சிறப்புரை!

சென்னை, மே 21-

தாம்பரம் மாநகரம் பம்மல் வடக்கு பகுதி தி.மு.க. இளைஞர் அணி மாணவர் அணி சார்பில் திராவிட மாடல் அரசின் இரண்டு ஆண்டு சாதனை விளக்கப் பொதுக்கூட்டம் இன்று (21.5.2023, ஞாயிற்றுக்கிழமை) மாலை 5 மணி குளக்கரை தெரு, அனகாபுத்தூரில் நடைபெறுகிறது.

கூட்டத்திற்கு ச.பிரபு தலைமை வகிக்கிறார் மு.நி. தமிழ்குமரன், எம்.சுரேஷ் குமார் செ.சுதாகர் த.சரவணன் டி.ரவிக்குமார் ஒய். என்.ராஜேஷ் ஜெ.ஜெயகாந்த் திருநீர்மலை: ஆர். யுவராஜ் எம்.சுரேஷ் எம். வினோத் டி.ஐயனார் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

பகுதிக் கழகச் செயலாளர் திருநீர்மலை த.ஜெயகுமார் வரவேற்கிறார்.

இக்கூட்டத்தில் தலைமைக் கழக சொற்பொழிவாளர் வண்ணை புகாரி கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் அமைச்சர் தா.மோ. அன்பரசன் ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

இக்கூட்டத்தில் கருணாநிதி எம்.எல்.ஏ., எஸ்.ஆர். ராஜா எம்.எல்.ஏ., மேயர் திருமதி. க.வசந்தகுமாரி, துணை மேயர் கோ.காமராஜ்வே.கருணாநிதி, இரா. நரேஷ்கண்ணா, எஸ். கே.நெப்போலியன், எம். கே.டி.கார்த்திக், பேராசிரியர் எல்.பியரபு, கே.சந்திரன், மு.ஸ்ரீதர், க.ஜெயசீலன், ஜி.பப்பிதா, சி.பார்த்தசாரதி, க.சுந்தரமூர்த்தி, இரா.குமரேசன், இரா.பாபுஜி, ப.அன்பழகன், க.மோகன், ப.ஆண்டவன், இ.பாலாஜி, டி.எம். ஜோசப், கலைவாணிபிரபு, வாணிஸ்ரீ, விஜயகுமார் சித்ராதமிழ் குமரன் சண்முகசுந்தரிஜெய தேவி மாரிமுத்து எஸ்.லாசர் க.பசுபதி, எஸ். சுரேஷ் ஜெ.சாந்தகுமார் மோ.சரவணன் எஸ். ராஜேஷ் எம்.மணிகண்டன் சி.பி. வினோத்குமார், பி. சரத் குமார் எஸ்.அருண் பாண்டியன் எஸ்.சிவமணி உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர்.

ஏ.செந்தில்குமார் டி.எம். புருஷோத்தமன் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

### தி.மு.க. விவசாயத் தொழிலாளர் அணி

# மாநில நிர்வாகிகள் கூட்டம்

### விவசாயத் தொழிலாளர் அணிச் செயலாளர் அன்னியூர் சிவா அறிவிப்பு

தி.மு.க. விவசாயத் தொழிலாளர் அணி மாநில நிர்வாகிகள் கலந்தாலோசனைக் கூட்டம் வருகிற 27-5-2023 சனிக்கிழமை மாலை 4.00 மணி அளவில், சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் விவசாயத் தொழிலாளர் அணித் தலைவர் உ.மதிவாணன் தலைமையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் மாநில நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

பொருள் : தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள் நூற்றாண்டு விழா.

“அண்ணா அறிவாலயம்”
சென்னை-18.
நாள்: 20-05-2023

**அன்னியூர் சிவா**
செயலாளர்,
தி.மு.க. விவசாயத் தொழிலாளர் அணி